TNKR080007902022

**சார்பு நீதிமன்றம், குளித்தலை,**
**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ. பி.எல்.,**

**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாய நீதிபதி, குளித்தலை.**

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10–ம் தேதி வெள்ளிக்கிழமை**

**MCOP No.305/2022**

**CNR No.TNKR08-000790-2022**

தியாகராஜன், வயது 52/22, த/பெ.நல்லதம்பி,
க.எண்.13/15, நத்தம் கோட்டை காலனி,
சிந்தலவாடி, கிருஷ்ணராயபுரம் வட்டம்,
கரூர் மாவட்டம். – 639 105. . . . மனுதாரர்

/எதிர்/

1. தேவி, க/பெ.மாரிமுத்து,
க.எண்.3/121/4 30, கள்ளர் தெரு,
மஞ்சதிடை, திருச்சி – 620 013.
2. சோமு, த/பெ.அய்யனார், க.எண்.2/150,
பொம்மசமுத்திரம், சோழிங்கநல்லூர்,
சோமரசம்பேட்டை, திருச்சி – 620 102. . . . எதிர்மனுதாரர்கள்

**உத்தரவு**

மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீடாக ரூ.10,00,000/–ஐ மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து 18% வட்டியுடன் செலுத்தக்கோரி மோட்டார் வாகன சட்டம் பிரிவு 140 மற்றும் 166–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 12.08.2022 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 24.03.2026 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 10.04.2026 |
| மனுதாரருக்காக | : | திரு.R.நடராஜன் – வழக்கறிஞர் |
| எதிர்மனுதாரர்கள் | : | நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள். |

1) **மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் கடந்த 09.09.2020-ம் தேதி அன்று காலை 6.15 மணியளவில் அவர் வீட்டிலிருந்து கரூர் - திருச்சி செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்த போது, அதே ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 81 X 6273 என்கின்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநரான இரண்டாவது எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, மேற்படி மனுதாரர் மீது மோதியதால், மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவும், இடது கை மணிக்கட்டு, முதுகு ஆகிய இடங்களில் பலத்த இரத்த காயமும், சிராய்ப்பு காயமும் ஏற்பட, அவர் கரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றிருக்கிறார். மேற்படி விபத்து சம்மந்தமாக இரண்டாவது எதிர்மனுதாரர் மீது இலாலாபேட்டை காவல் துறையினர் குற்ற எண்.506/2020 இ.த,ச பிரிவுகள் 279, 337-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள். மேற்படி விபத்திற்கு முன்னர் மனுதாரர் டைலரிங் வேலை செய்து மாதம் ரூ.20,000/- வரை சம்பாதித்து வந்துள்ளார். எனவே, விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக இழப்பீடாக ரூ.10,00,000/-த்தை எதிர்மனுதாரர்கள் 18% வட்டியுடன் செலுத்த உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

3) **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் :-**

**(அ)** இந்த வாகன விபத்தானது TN 81 X 6273 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடைபெற்றதா?

**(ஆ)** மனுதாரர் இழப்பீட்டுத்தொகை பெற உரியவரா? ஆம் எனில், எவ்வளவு தொகை அவருக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கது?

**(இ)** எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு இழப்பீட்டுத்தொகை வழங்க கடமைப்பட்டவர்களா? ஆம் எனில், எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்?

4) மனுதாரர் தரப்பில், மனுதாரரான தியாகராஜன் என்பவர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) **பிரச்சனை ஒன்றிற்கான தீர்வு :-**

***(அ)*** *இந்த வாகன விபத்தானது TN 81 X 6273 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடைபெற்றதா?*

**5 (1)** ம.சா.1 அவரது முதல் விசாரணையில், இம்மனுவின் மனுதாரர் கடந்த 09.09.2020-ம் தேதி அன்று காலை 6.15 மணியளவில் அவர் வீட்டிலிருந்து கரூர் – திருச்சி செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்த போது, அதே ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 81 X 6273 என்கின்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநரான இரண்டாவது எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, மேற்படி மனுதாரர் மீது மோதியதால், மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவும், இடது கை மணிக்கட்டு, முதுகு ஆகிய இடங்களில் பலத்த இரத்த காயமும், சிராய்ப்பு காயமும் ஏற்பட, அவர் கரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றிருக்கிறார் என்றும், மேற்படி விபத்து சம்மந்தமாக இரண்டாவது எதிர்மனுதாரர் மீது இலாலாபேட்டை காவல் துறையினர் குற்ற எண்.506/2020 இ.த,ச பிரிவுகள் 279, 337-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றும், மேற்படி விபத்திற்கு முன்னர் மனுதாரர் டைலரிங் வேலை செய்து மாதம் ரூ.20,000/- வரை சம்பாதித்து வந்துள்ளார் என்றும், எனவே, விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக இழப்பீடாக ரூ.10,00,000/-த்தை எதிர்மனுதாரர்கள் 18% வட்டியுடன் செலுத்த உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

**5 (2)** விபத்து சம்பந்தமாக இரண்டாவது எதிர்மனுதாரர் மீது கரூர் மாவட்டம், இலாலாபேட்டை காவல் துறையினரால் குற்ற எண்.506/2020 இ.த.ச பிரிவுகள் 279, 337-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்கின்ற சங்கதியை

ம.சா.ஆ.1 ஆவணத்தின் வாயிலாகவும், மேற்படி இரண்டாவது எதிர்மனுதாரர் மீதே இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்கின்ற சங்கதியை ம.சா.ஆ.2 ஆவணத்தின் வாயிலாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாதது அவர்களுக்கு எதிரான அனுமானத்தை உருவாக்குகிறது. எனவே, ம.சா.1–ன் வாய்மொழி சாட்சியத்தின் வாயிலாகவும், சான்றாவணங்களின் வாயிலாகவும் முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 81 X 6273 என்கின்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநரான இரண்டாவது எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்கின்ற சங்கதியை மனுதாரர் நிரூபணம் செய்துள்ளார். இவ்வாறாக, பிரச்சினை ஒன்றிற்கு தீர்வு காணப்படுகிறது.

**6) பிரச்சினை இரண்டிற்கான தீர்வு :–**

***(ஆ)*** *மனுதாரர் இழப்பீட்டுத்தொகை பெற உரியவரா? ஆம் எனில், எவ்வளவு தொகை அவருக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கது?*

இம்மனுவில் கண்ட விபத்தானது இரண்டாவது எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டதாக பிரச்சினை ஒன்றுக்கு தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு மேற்படி விபத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக எந்தெந்த தலைப்புகளின் கீழ் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர் என்பது குறித்து இந்நீதிமன்றத்தின் முடிவு பின்வருமாறு :

**6 (1) பகுதி நிரந்தர ஊனத்திற்காக :–**

மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவும், இடது கை மணிக்கட்டு, முதுகு ஆகிய இடங்களில் பலத்த இரத்த காயமும், சிராய்ப்பு காயமும் ஏற்பட்டு, அவர் கரூரில் உள்ள அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் கடந்த 09.09.2020–ம் தேதி முதல் 06.10.2020–ம் தேதி வரை சிகிச்சை பெற்றுள்ளார் என்கின்ற சங்கதியை ம.சா.ஆ.5 விடுவிப்பு சான்றிதழ் வாயிலாக அறிய முடிகின்றது. மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக அவர் மருத்துவக்குழு முன்பு ஆஜராகியதன் அடிப்படையில் கொடுக்கப்பட்ட நீ.ம.சா.ஆ.1 மருத்துவச் சான்றிதழில் மனுதாரருக்கு 20% ஊனம் என

குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்விதத்தில், மனுதாரருக்கு 20 X 12,000/- = ரூ.2,40,000/- இழப்பீடாக கிடைக்கத்தக்கது.

**6 (2) வலி மற்றும் வேதனைக்காக :-**

55 வயது மதிக்கத்தக்க மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவும், இடது கை மணிக்கட்டு, முதுகு ஆகிய இடங்களில் காயமும் ஏற்பட்டு, அவர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த போதிலும், அதன் பிறகு அவருக்கு தாங்க முடியாத வலியும், வேதனையும் ஏற்பட்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. குறிப்பாக, அவர் படிக்கட்டுகளில் ஏறும் சமயத்தில் மிகவும் சிரமப்படக்கூடும். எனவே, மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.25,000/- இழப்பீடாக கிடைக்கத்தக்கது.

**6 (3) கூடுதல் ஊட்டச்சத்து :-**

மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவும், இடது கை மணிக்கட்டு, முதுகு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு, அவர் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்பதாலும், அதன் பின்னர் அவருக்கு முழுமையாக குணம் அடைவதற்கு சுமார் 2 மாதங்கள் ஆகியிருக்கலாம். அவ்வாறு அவர் மருத்துவமனையில் உள்நோயாளியாக பெற்ற சமயத்தில் மனுதாரரின் ஊட்டச்சத்திற்காக ரூ.10,000/- செலவாகியிருக்கும் எனவே, மனுதாரரின் ஊட்டச்சத்து செலவிற்காக ரூ.10,000/- இழப்பீடாக கிடைக்கத்தக்கது.

**6 (4) உதவியாளர் கட்டணம் :-**

மனுதாரர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சமயத்தில், அவருக்கு குறைந்தது இரண்டு நபர்களாவது உதவியாளர்களாக இருந்திருக்கக்கூடும். மேற்படி, இரண்டு நபர்கள் அவர்களது வேலைகளை விட்டு முழு நேர பணியாகவோ, பகுதி நேர பணியாகவோ செய்திருப்பார்கள். எனவே, உதவியாளர் கட்டணம் என்கின்ற தலைப்பில் 10,000/- கிடைக்கத்தக்கது.

**6 (5) பயணச்செலவு :—**

விபத்து ஏற்பட்ட சமயத்தில் இருந்து முழுமையாக குணமாகும் வரையில் மனுதாரர் மருத்துவனைக்கு சென்றிருக்கக்கூடும். அவ்விதத்தில், மனுதாரரின் பயணச்செலவிற்காக ரூ.10,000/— இழப்பீடாக கிடைக்கத்தக்கது.

**6 (6) மருத்துவச் செலவு :—**

மனுதாரருக்கு மேற்படி விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்காக அவர் கரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் கடந்த 09.09.2020—ம் தேதி முதல் 06.10.2020—ம் தேதி வரை சிகிச்சை பெற்ற சமயத்தில் Scan எடுத்த வகையில் மனுதாரருக்கு ரூ.500/—செலவாகியுள்ளது என்கின்ற சங்கதியை ம.சா.ஆ.7 ஆவணத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. அவ்விதத்தில், மனுதாரருக்கு மருத்துவச்செலவு என்கின்ற வகையில் ரூ.500/— கிடைக்கத்தக்கது.

**6 (7) வருமான இழப்பு :—**

மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவும், இடது கை மணிக்கட்டு, முதுகு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு, மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற வகையில் அவர் குறைந்தது 2 மாதங்களாவது வேலைகளுக்கு செல்லாமல் இருந்திருக்கக்கூடும். விபத்து சமயத்தில் மனுதாரர் டைலர் செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/— சம்பாதித்ததாக கூறியிருப்பினும், மேற்படி சங்கதிக்கு ஆதரவாக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை. மனுவில் ஒரு சங்கதியை தெரிவித்தாலேயே அதனை நிரூபிக்கப்பட்ட சங்கதியாக கருத இயலாது. இருப்பினும், 55 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/— ஆவது சம்பாதித்து வந்திருக்க வேண்டும். எனவே, மனுதாரருக்கு வருமான இழப்பு என்கின்ற வகையில் 2 X 10,000 = 20,000/— இழப்பீடு கிடைக்கத்தக்கது.

**6 (8)** மேற்கண்ட அனைத்து பொருண்மைகளையும் கருத்தில் கொண்டு

மனுதாரருக்கு கீழ்கண்ட வகையில் இழப்பீடு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகின்றது.

| | | |
|---|---|---|
| பகுதி நிரந்தர ஊனத்திற்காக | ரூ. | 2,40,000/— |
| வலி மற்றும் வேதனைக்காக | ரூ. | 25,000/— |

| | | |
|---|---|---|
| கூடுதல் ஊட்டச்சத்து | ரூ. | 10,000/- |
| உதவியாளர் கட்டணம் | ரூ. | 10,000/- |
| பயணச்செலவு | ரூ. | 10,000/- |
| மருத்துவ பில்கள் | ரூ. | 500/- |
| வருமான இழப்பு | ரூ. | 20,000/- |
| **மொத்தம்** | **ரூ.** | **3,15,500/-** |

**7) பிரச்சனை மூன்றிற்கான தீர்வு :-**

***(இ)** எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு இழப்பீட்டுத்தொகை வழங்க கடமைப்பட்டவர்களா? ஆம் எனில், எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்?*

முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 81 X 6273 என்கின்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநரான இரண்டாவது எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளதால், மேற்படி இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் என்கின்ற கோதாவில் முதல் எதிர்மனுதாரரே மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையை செலுத்த கடமைப்பட்டவர் என பிரச்சினை மூன்றிற்கு விடை காணப்படுகிறது.

**8) முடிவாக,**

**(அ)** மனுதாரரின் மனுவானது பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

**(ஆ)** முதல் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இழப்பீடாக **ரூ.3,15,500/-ஐ** மனுதாரர் மனு தாக்கல் செய்த நாள் முதல் தொகையை வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5 சதவீத வட்டி மற்றும் செலவு தொகையுடன் கொடுக்க வேண்டும் என்றும்,

**(இ)** மாண்புமிகு உச்சநீதிமன்ற உரிமையியல் மேல்முறையீட்டு எண்.4299/2025 நாள் : 18.03.2025-ல் வழங்கிய தீர்ப்பின் படியும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ROC No.55584/2025/Sct Dated : 02.07.2025-ல் அனுப்பிய சுற்றறிக்கையின் படியும் மேற்படி தொகையை முதல் எதிர்மனுதாரர் கீழ்க்கண்ட வங்கி கணக்கில்,

| மனுதாரர் | Amount | Account Number | Bank | Branch | IFSC Code | MICR Code |
|---|---|---|---|---|---|---|
| Thiyagarajan | **ரூ.3,15,500/-** | 02540100 0033467 | Indian Overseas Bank | Lalapet | IOBA0000254 | 639020103 |

உத்தரவு பிறப்பித்த ஒரு மாத காலத்திற்குள் வைப்பீடு செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையை வைப்பீடு செய்யப்பட்ட விபரத்தை முதல் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்திற்கு குறிப்பாணை மூலம் தெரிவிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**(ஈ)** மனுதாரர் ஏற்கனவே நீதிமன்ற கட்டணமாக ரூ.375/- செலுத்தியது போக மீதமுள்ள நீதிமன்ற கட்டணமான ரூ.2153/-ஐ 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் இந்த உத்தரவு செல்லத்தக்கதல்ல.

**(உ)** வழக்கறிஞர் கட்டணம் ரூ.9300/- என நிர்ணயம் செய்யப்படுகிறது.

**(ஊ)** மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பு வழக்கு எண்.Tr.Cmp Nos.264 to 281 of 2020 M/s.Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s. Mr.Ayyanar and others நாள் : 11.05.2020 அன்று பிறப்பித்த உத்தரவின் படி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே, தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப்படாது.

| செலவுத் தொகை விபரம் ரூ. | மனுதாரர் தரப்பில் |
|---|---|
| மனுவிற்கான நீதிமன்ற கட்டணம் | ரூ.2528/- |
| வக்காலத்து | ரூ.10/- |
| வழக்கறிஞர் ஊதியம் | ரூ.9300/- |
| **மொத்தம்** | **ரூ.11,838/-** |

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.04.10 17:30:04 +0530

தீர்ப்பாய நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் :–**

ம.சா.1 – தியாகராஜன் (மனுதாரர்)

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை |
| ம.சா.ஆ.2 | குற்ற அறிக்கை |
| ம.சா.ஆ.3 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| ம.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் |
| ம.சா.ஆ.5 | மருத்துவ விடுப்பு சான்றிதழ் |
| ம.சா.ஆ.6 | காயச்சான்றிதழ் |
| ம.சா.ஆ.7 | மருத்துவ பில்கல் |

**நீதிமன்ற சான்றாவணம் :–**

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | மருத்துவக்குழு வழங்கிய சான்றிதழ் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :–** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.04.10 17:30:08 +0530

தீர்ப்பாய நீதிபதி,
குளித்தலை.